**செய்தி வெளியீடு எண்: 834** **நாள்: 14.11.2018**

## <u>செய்தி வெளியீடு</u>

## "அனைத்து தரப்பு மக்களும் வாழத்தக்க வருங்கால நகரங்கள்" என்ற தலைப்பில் உலகளாவிய கருத்தரங்கம் மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் அவர்கள் துவக்கி வைக்கிறார்

தமிழக அரசும், ஜெர்மன் அரசும் இணைந்து வருங்காலத்தில் சமூக மாற்றத்திற்கு ஏற்ப பெருகிவரும் நகரமயமாக்கலின் நகர கட்டமைப்பில் புதிதாக புகுத்தப்பட வேண்டிய உத்திகள், மேம்படுத்தப்பட வேண்டிய அடிப்படைக் கட்டுமான வசதிகள், பெருநகரங்களில் வசிக்கும் மக்களின் வருங்கால தேவைகள் ஆகியவை குறித்து கலந்தாலோசித்து திட்டங்களை வரையறை செய்ய உள்ளன. அதன் ஒரு பகுதியாக தமிழக அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறையும், ஜெர்மன் அரசின் சார்பில் Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH என்ற நிறுவனமும் இணைந்து 15.11.2018, 16.11.2018 ஆகிய நாட்களில் சென்னையில் "அனைத்து தரப்பு மக்களும் வாழத்தக்க வருங்கால நகரங்கள்" (Reimagining Inclusive Cities) என்ற தலைப்பில் உலகளாவிய கருத்தரங்கம் நடத்தப்படவுள்ளது. இக்கருத்தரங்கத்தை மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் அவர்கள் துவக்கி வைத்து சிறப்புரையாற்றுகிறார்.

இரண்டு நாட்கள் நடைபெறும் இக்கருத்தரங்கத்தில் நகர்புற வளர்ச்சித்துறையின் நான்கு தூண்கள் என கருதப்படும் திட்டமிடல், நிலம், வீட்டுவசதி மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து ஆலோசிக்கப்படும். சர்வதேச மற்றும் தேசிய அறிவையும், அனுபவங்களையும் ஒருங்கிணைக்கும் வகையில் நகரங்களை உருவாக்குதல் குறித்த கலந்துரையாடலை ஏற்படுத்தும் ஒரு தளமாக இக்கருத்தரங்கம் பயன்பட வேண்டும் என்பதே நோக்கம் ஆகும். இக்கருத்தரங்கின் முதல் நாள்

நகரமயமாக்கலில் திட்டமிடல், நிலம், திறனுக்கேற்ற வீடுகள் (affordable housing) மற்றும் அடிப்படை வசதிகள் ஆகியவற்றில் எழும் பிரச்சினைகளை எப்படி எதிர்கொள்வது, அதனை எவ்வாறு சரி செய்வது என்பது குறித்தும், கருத்தரங்கத்தின் இரண்டாம் நாளில் நகர்புறங்களில் வாடகை குடியிருப்புகளை எவ்வாறு நிர்மாணிப்பது, வரன்முறைபடுத்தவது (regulated) மற்றும் நிர்வகிப்பது என்பது குறித்தும் விவாதிக்கப்படும்.

இக்கருத்தரங்கில் 50–க்கும் மேற்பட்ட பல்வேறு நாட்டின் பல்கலைக்கழக பேராசியர்கள், ஆராய்சியாளர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் பிரதிநிகள் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை எடுத்துரைக்க உள்ளார்கள். மேலும், மத்திய, மாநில அரசுகளின் வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறையின் உயர் அலுவலர்கள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு நம் நாட்டின் நிறைவேற்றப்படும் வீட்டுவசதி திட்டங்கள் குறித்து விளக்கவுள்ளார்கள். குறிப்பாக அமெரிக்காவின் North Carolina, Pennsylvania Universities மற்றும் Affordable housing Institute, Urban Institute, Singapore Management University, University of Melbourne ஆஸ்ரேலியா ஆகிய வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள், ஜெர்மன், இங்கிலாந்து, தென்ஆப்ரிக்கா, தாய்லாந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகளின் நகர்புற வீட்டுவசதி மற்றும் நிதித்துறை உயர் அலுவலர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துரைக்க உள்ளனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9